**வளர்தமிழ் - 3** **18-04-2020**

**பாடம்- 3 மீட்டல்**

1) அதியர்மான் எவ்வூரை ஆண்டு வந்தான்?

2) நெல்லிக்கனியின் சிறப்பு யாது?

3) ஔவையார் எழுதிய நூல்கள் மூன்று தருக?

4) சிறுவருக்கும் பெரியோருக்கும் அறிவுரை கூறும் பாடல்களைப் பாடியவர் யார்?

5) தமிழ் நெடுங்கணக்கிலுள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?

6) முதலெழுத்துகள் எத்தனை?

2) பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிந்து எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| ஓடுகின்றன | இருக்கின்றன | பறக்கின்றன |
| சுற்றுகின்றன | குளிக்கின்றன | நீந்துகின்றன |

எ+கா:-

யானைகள் குட்டிகளுடன் ஆற்றில் குளிக்கின்றன.

1. கூடை நிறையப் பழங்கள் ______________.

2. வாத்துகள் குஞ்சுகளுடன் தண்ணீரில் ______________.

3. பறவைகள் கூட்டங்கூட்டமாக வானத்தில் ______________.

4. சிறுவர் விட்ட பம்பரங்கள் நன்றாகச் ______________.

5. சிங்கத்தைக் கண்ட மான்கள் அச்சத்தினால் விரைவாக ______________.

3) கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதுவோம்.

**எ+கா:-**

பரிசுகள் ஆசிரியரால் கொடுக்கப்பட்டன.

(மாணவரால் / ஆசிரியரால்)

1. கடகம் ________________ செய்யப்படுகிறது.

   (தாளினால் / ஓலையினால்)

2. கள்வன் ________________ துரத்தப்பட்டான்.

   (நாயால் / பூனையால்)

3. மீன் ________________ உயிர்க்கிறது.

   (பூவினால் / செதிலினால்)

4. துணி ________________ செய்யப்படுகிறது.

   (நூலால் / இரும்பால்)

5. யானை ________________ மரத்தைத் தூக்குகிறது.

   (மருப்பால் / தும்பிக்கையால்)